அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை :02.2001

எனது இல.IV/2/9/361/8 H/111/111,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.01.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்

**தாபன விதிக்கோவையின் 11 ஆவது தொகுதியின் XLVIIIஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் பிரிவின் கீழான ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் பெயர் பட்டியல்.**

"அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாடு–தாபன விதிக்கோவையின் 11 ஆம் தொகுதி" என்ற தலைப்பில் 1999.10.29 ஆந் திகதிய 23/99 இலக்கம் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் 1999.11.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைபடுத்திய தாபன விதிக்கோவையின் 11 ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 19/5 பிரிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான செயலாளரினால் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் குழாம் ஒன்றை நடாத்திச் செல்ல வேண்டியுள்ளது.

02. அப் பெயர் பட்டியலை வெளியிடும் வரை பின் தரப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் மூலமாக வெளியிடப்பட்டிருக்கும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் பெயர் பட்டியல்களில் பெயர் தரப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிலே பதவி நிலை உத்தியோகத்தராக 10 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான சேவைக் காலத்தை கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களை தாபன விதிக்கோவையின் 11 ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 19/6 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள அலுவல்களுக்காக மேலும் ஈடுபடுத்த வேண்டும்

| திகதி | சுற்றுநிருபம் |
|---|---|
| 1994.11.02 | 35/92(I) |
| 1997.11.13 | 35/92(III) |
| 1998.08.24 | 35/92(V) |
| 1999.05.17 | 5/99(I) |
| 1999.08.16 | 5/99(II) |
| 2000.01.14 | 5/99(III) |
| 2000.05.23 | 5/99(IV) |

03. 1995.06.26 ஆம் திகதிய 35/92(11) இலக்க மற்றும் 1997.11.13 ஆம் திகதிய 35/92(IV) இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளில் பெயர் தரப்பட்டுள்ள சட்டத்தரணிகளுக்கு ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாக மேலும் செயலாற்ற முடியும்.

04. தாபன விதிக்கோவையின் 11 ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 19:5 ஆவது பிரிவின் கீழ் பெயர் பட்டியல் வெளியிடும் வரை இவ் ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும்.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு